# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:4** **தேதி:28.10.2014**

# 03.02.2015 முதல் கால வரையற்ற வேலை நிறுத்தம்

## BSNL புத்தாக்கத்திற்காக……

அன்பார்ந்த தோழர்களே,

28.10.2014 அன்று FORUM OF BSNL UNIONS/ASSOCIATIONS கூட்டம் நடைபெற்றது. அதில் விரிவான விவாதத்திற்கு பின் கீழ்கண்ட முடிவுகள் எட்டப்பட்டது.

1) அரசாங்கத்தின் BSNL விரோத கொள்கைகளுக்கு எதிராகவும்,
2013 ஆகஸ்ட் 3 அன்று நடைபெற்ற தேசிய கருத்தரங்கில் ஏற்றுக் கொள்ளப்பட்ட கோரிக்கைகளை வலியுறுத்தியும்,
DELOITTEE கமிட்டி பரிந்துரைகளுக்கு எதிராகவும்,
டவர் கம்பெனி உருவாக்கத்திற்கு எதிராகவும்,
BSNL-MTNL இணைப்பிற்கு எதிராகவும்
**2015 பிப்ரவரி 03ஆம் தேதி முதல் காலவரையற்ற வேலை நிறுத்த்தில் ஈடுபடுவது என FORUM முடிவு செய்துள்ளது.**

2) வேலை நிறுத்தத்திற்கு முன்பாக
**டிசம்பர் மாதத்தில் ஒரு நாள் கோரிக்கை தினம் கடைபிடிப்பது எனவும்,**
**ஜனவரி மாதத்தில் 3 நாட்கள் தர்ணா நடத்துவது எனவும்,**
**ஒரு வார காலம் கடும் பிரச்சாரத்தில் ஈடுபடுவது எனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.**

3) **பாராளுமன்ற உறுப்பினர்களை சந்தித்து தொழிலாளர்களின் கோரிக்கைகளை விளக்குவது, கையெழுத்து இயக்கம் நடத்துவது என ஊழியர்கள் மற்றும் மக்கள் மத்தியில் பிரச்சாரம் நடத்த வேண்டும்**.

4) FORUMத்தின் CORE COMMITTEE நவம்பர் 12ஆம் தேதியும், FORUM கூட்டம் நவம்பர் 13ஆம் தேதியும் நடைபெறும். அப்போது கோரிக்கை சாசனம், இயக்கங்களுக்கான தேதிகள் மற்றும் இது தொடர்பான இதர பிரச்சனைகள் குறித்து விவாதித்து முடிவு செய்யப்படும்.

**தொழிலாளர்களின் போராட்டங்கள் முன் யாராட்டமும் செல்லாது என்பதை நிரூபிப்போம்.**
**கண்ணின் மணியாம் BSNLஐ காத்திடுவோம்.**

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
மாநில செயலாளர்.